*News and Articles in Tamil and English Please send them to:*

THE EDITOR,
The Morning Star,
Diocesan Office,
Vaddukoddai

# THE MORNING STAR

Registered as a Nespaper at the General Post Office, Sri Lanka
Under No.Q / J / 104 / News /
*Established : 1841 : A Christian Weekly : Published Every Friday*

Vol: 156 Jaffna, Friday 09 September 1995 No. 34

RIGHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE

Subscription
Island Rs 100/-
For Advertisements
Apply to
THE MANAGER
The Morning Star
Diocesan Office,
Vaddukoddai

LIBRARY 18 - 9 - 1995 UNIVERSITY OF JAFFNA

## THOUGHT



Christ, our Lord and Master, seeks from us deeds, not words. Devotion to Him is, in the first place, not sentimental, but practical. The first act is to give up at His bidding what is personally known to be wrong, relying on His strength to reinforce our wills so that we are able to do what is right.

If the Christian faith we profess possesses the full dynamic to change men and women, giving them new hope and urging them forward to nobler action, then further proof is hardly needed. But if it has on power to restore and recreate the human will, leading on to deeds of unselfish service, then it stands self-condemned. It has become useless, as salt that has lost its savour. It is like a house built upon the sand, instead of being founded on a rock.

This test of action is a very simple one, but it goes deep. It is the only standard that Christ Himself will recognize as sound and true. As the good Physician, He probes the disease till He gets down to the evil in the human will itself.

In the first century, there could be no doubt in anyone's mind that the lives of the disciples had been marvellously changed. Men took knowledge of them, that they had been with Jesus. A miracle of Joy had happened. The new birth, from within had burst through its own confining sheath in every direction. Century - old conventions were swept aside in a few years. The Spirit of the living God was manifest in the fearless deeds of humble men and women, which had such power of new Life and new Joy in them that they literally transformed the world.

The same joy, the same power of the Spirit of life in Christ Jesus, should be witnessed in every country to-day. The age of miracles, in this sense of the word, has never passed. The great leap forward may still be taken. It is only our own faith and courage that are lacking when He bids us "launch out into the deep."

— C. F. Andrews

## We Are Back

Because of the 'Operation Dragon Fire' we could not publish the Morning Star during the past few weeks. We took our printing Press to Jaffna Town Spending Rs 12,000/- on transport alone. Now it is brought back to Vaddukoddai and we have resumed work.

Please pray for the functioning of 'The Morning Star' and The A. C. M. Press Thank You

## Twenty Five Thousand People Flee

Residents of Chulipuram, Moolai, Tholpuram, Pannakam, Sithankerny and Chankanai who came back to live in their villages after the withdrawal of the Sri Lankan Army who left on the 14th of July, fled to Jaffna again on Monday the 21st instant. About 25000 people moved out and are now living in refugee camps in Jaffna town. Thirteen persons were killed at Chulipuram and Tholpuram because of random shelling.

## Alaveddy and Sandilipay Churches now worship at Ariyalai

Our Church members of Alaveddy and Sandilipay who left their homes on 9th July because of the 'Operation Leap Forward' now conduct their Sunday morning worship at No 129 Ascervathappar Road, Nallur East Ariyalai.

## Induction of New President of the Methodist Church in Srilanka

The Rev. Dileep Ranjanik Fernando was inducted as the new President of the Methodist Church in Srilanka, by the past President The Rev. Harold A. Fernando in the Kollupitiya Methodist Church on August 16th, 1995 at 5. 30. p.m.

The President Elect and the clergy of the Methodist Church came in a procession as the Hymn, Praise to the Lord, the Almighty, the King of Creation, was sung. The service was conducted by two Ministers of the Church in Sinhala, Tamil and English. The Former Presidents The Rev. Harold Fernando, The Rev. Soma Perera and The Rev. Denzil de Silva robed the newly inducted President. Then the Conference Bible was presented to the New President and the Former presidents laid their hands on the New President invoking the Blessing of the Almighty. The President and his family partook of the Lord's Supper and then The Rev. Duleep Fernando preached a sermon in English, The resume of which was translated into Sinhala and Tamil.

( Continued on page 4 )

## ANTHOLOGY

CWM has produced a worship and prayer anthology entitled, Dare to Dream. This joyful, colourful and reflective anthology of prayers, readings, poetry, dramatic readings and other worship is drawn from across the world and celebrates the diversity of Christian experience in many cultures.

The contents of the book fall into five sections: Worship, Vocation, Our life together in society, Trade, politics and aid, Freedom for all. The focus is very much on mission and the responsibilities we have towards each other as God's people. It reflects a deep concern for biblical social justice and is useful for worship in churches, schools and private prayer and meditation.

Compiled and edited by Geoffrey Duncan, with contributions from Francis Brienen, Kate Compston, Martin Gage, John Reardon and Janet Wootton. It will be published by Harper Collins Religious in June 1995. There will be a book launch - details later. Copies will be on sale at the bicentenary celebrations.

ISBN 0551 02898 X Price £6. 99

Please ask your local Christian bookshop and secular book-

(Continued on page 4)

## Jaffna Diocese of the Church of South India

## DIOCESAN FESTIVAL 1995

On Saturday 30th September 1995
at Cathedral Church, Vaddukoddai.

8.30 a.m Holy Communion & Presbyteral Ordination (Choral Liturgy)

Celebrant : Rt. Rev. Dr. S. Jebanesan

Preacher : Rt. Rev. D. J. Ambalavanar

**PRESBYTERAL ORDINATION**

Rev. T. Vasanthakumar
(Worker Uduppiddy Church)

Rev. T. Jeyachandran
(Worker Mankulam & Mahilchipuram Churches)

Rev. Antony Saverimuthu
(Worker Bharathipuram Church)

10.30 a.m Releasing of Diocesan Bulletin 1995 and Variety Entertainment

01.00 p.m Lunch and Departure

**All are Cordially Invited**

Rev. C. T. Robets
Secretary

Jaffna Diocese of the Church of South India



# வாழும் எழுத்துக்கள்

## கவியரசு கண்ணதாசனின் தமிழ்ப்பணிகள்

ஜெ. கி. ஜெயசீலன்

நமது தமிழிலக்கிய வரலாறு, காலந்தோறும் கவிதை நதிகளால் செழித்துக் கொழித்து வளம்பெற்றுத் திகழ்கிறது. அதன் தலைமுறை வளர்ச்சியானது, காலப்பரிணாமத்திற்கேற்பக் கூர்ப்படைந்து வந்து கொண்டிருப்பதை, உன்னிப்பாகக் கற்பவர்கள் உய்த்துணரலாம். சங்க இலக்கியங்கள் தொடக்கம், எங்கள் காலச் சங்க இலக்கியங்கள் வரை, அவற்றின் உள்ளடக்கங்கள் உலகை வெல்லும் சங்கதிகளாக உலா வருகின்றன. ''பாரதி'' என்ற மகா கவிஞனின் மேதா வருகைக்குப்பின், நமது தமிழிலக்கிய வயலில் புதுமைகளின் அறுவடை; பூகம்ப வேகத்திலே ஆரம்பமானது.

''நதியில் விளையாடிக் கொடியிற் தலை சீவி, நடந்த இளந் தென்றலாக, நம் முன்னே நடமாடிப் போனவன்தான் கவியரசு கண்ணதாசன்! எளிமை, தெளிவு, இளமை, வலிமை இவற்றின் துணையோடு தமிழ்க்கவிதைகளில் தாராள போதை ஏற்றியவன் அவன் 'திரைப்படவுலகம்'' என்ற தீப்பந்த வெளிச்சத்தில், தன் திறமைகளை அரங்கேற்றிய பின்புதான்; கவிதைத் தமிழின் மீது பலரின் காதுகளுக்கும் காதல் வந்தது! பழந் தமிழிலக்கியங்களின் சாறையும், சுவையையும், நமது இளந்தமிழிதயங்கள் தோறும் இறைத்துப்போன பணியை, இங்கிதமாகச் செய்தவன் அவன். அவனது அந்தரங்க வாழ்வைப் பலரும அங்கீகரிக்காது விட்டாலும், அந்தக் கவிதைகளின் சொக்க வைக்கின்ற சுகபோகம், இதயங்கள் முழுவதிலும், இனிமையூட்டியவண்ணமிருக்கும், இனிமை நலம் வாய்ந்தது.

தமிழ்த்துடிப்போடு பிறந்த அவனது நாடித்துடிப்பு, ஆரம்பக் காலங்களில் நாஸ்திகப்பிடிப்போடேயே இருந்தது. கடவுள் மறுப்புக் கொள்கைகளிலும், சீர்திருத்தச் சித்தாந்தங்களிலும் ஈடுபாடு கொண்ட அந்த இதயம், தொடக்கக் காலங்களிலே தன்னை முழுவதுமாகத் திராவிடர்க் கழகத்திலே திணித்துக் கொண்டது. பிசகில்லாத இசைக் கவிதைகளும், பிழையில்லாத பிரச்சாரக் கவிதைகளும் பீறிட்டுப் பாய்ந்தன. கேள்வி பிறந்தது அன்று! நல்ல - பதில் கிடைத்தது இன்று!'' எனக் கூறி;

''படித்த மாந்தர் நிறைந்த நாட்டில்
பார்க்கும் யாவும் பொதுவுடமை!
நல்ல மனமும், பிள்ளைக் குணமும்
நமது வீட்டின் தனியுடமை'' எனும்,

நன்மை பல பயக்கும் நயமான தத்துவங்கள் வரைக்கும், நடை பயின்றன அவனது நாவும், பேனாவும்! பொதுவுடமைப் பண்பாடும், அதன் புனிதம் மிகு பயன்பாடும் இந்தத் திரைப்படப்பாடலிலே தித்திப்போடு தீட்டப்பட்டிருக்கிறது. மண்டிக்கிடக்கும் மதப்பண்பாடுகள் நமது மனிதப்பண்பாடுகளை மழுங்கடிக்கும் பீடைகள் என்பதை, இக் கவிதை வரிகள் உன்னிப்பாகவே ஊர்ஜிதம் செய்கின்றன. முதன் முறையாகத், தனியுடைமைக்குக்கூட, அவனால் தகுதியான வரைவிலக்கணம் ஒன்று தரப்பட்டிருக்கிறது நமது கவிதைத் தமிழ் இவற்றால் தான் கர்வப்பட்டிருக்கிறது!

அவனது தமிழ்ப்பணிகள் திரைப்பணிகள் மூலமே தீவிரம் பெற்றன. வாலிபத் தமிழோடு வலம் வந்த பாடல்கள் எல்லாம், ஒரு வசந்த வசீகரத்துடனேயே வந்து சங்கமித்தன. காதல், வீரம், கோபம், சோகம், ஏமாற்றம், பயம், உவகை, சிரிப்பு, அழுகை போன்ற உணர்வுகள் யாவுமே, உயர்ந்த தத்துவக் கவிதைகளாக உருக் கொண்டன.

''பறவையைக் கண்டான்; விமானம் படைத்தான்!
பாயும் மீனிற் படகினை கண்டான்!
எதிரொலி கேட்டான்; வானொலி கண்டான்
எதனைக் கண்டான்? மதந்தனைப் படைத்தான்!
மனிதன் மாறிவிட்டான்!
மதத்தில் ஏறிவிட்டான்!''

எழுச்சிக் கவிதைகள் எல்லாம், அவனது ஆரம்பகாலங்களில் அறுவடையானவையே! பகுத்தறிவுச் சீற்றம், பைந்தமிழ் கோற்றத்தோடு பயன்பட்டு திராவிடக்கழகம், அவனது தீட்டிக் கவிதைகளுக்கு தீனிபோட்டது.

'அடிமையின் உடம்பிலே இரத்தம் எதற்கு? தினம்
அச்சப்பட்ட கோழைக்கு உள்ளம் எதற்கு!
கொடுமையைக் கண்டு, கண்டு பயம் எதற்கு? நீ
கொண்டு வந்த தென்னடா! மீசை முறுக்கு!
ரெண்டில் ஒன்றைப் பார்ப்பதற்கு தோளை நிமிர்த்து
அதில் நீதி வரவில்லையெனில் வாளை நிமிர்த்து.

இசையிலே பிசையப்பட்ட அவனது இளகிய தமிழ், நமது இரு செவிகளினுள்ளேயும் இறைத்தது கள்ளை!

''முன்னோர் எல்லாம் மூடர்கள் அல்ல;
நமக்குண்டு பண்பாடு! - அட அம்மாடீ!
முழங்கால் தெரியும் ஆடையை மாற்றித்
தமிழ்மகள் நடைபோடு! - அம்மா!
தமிழ்மகள் நடைபோடு!'

என்கிறான் இந்த அவநாகரிகத்தின் அடிவருடிகளைக் கண்டு! நாஸ்திகம் பாடிய அதே இதயந்தான், இதையும் பாடியிருக்கிறது, இடமறிந்து. 'தவறானபண்பாடுகள் மனங்களைப் புண்படுத்துகின்றன' என்ற கருத்தின் மேன்மையை, இக்கவிதை வரிகள் அடித்தெனப் புலப்படுத்துகின்றன. முன்னோர்களில் பலர் மூடர்களாகவே இருந்திருக்கலாம். ஆனால், எல்லோரும் அல்லர் அவர்களிலும் சிலர், அறிவிற் சிறந்த அதிபுத்திசாலிகளாக அவதரித்து இருந்திருக்கிறார்கள் என்பதை, ''முன்னோர் எல்லாம் மூடர்கள் அல்ல; நமக்குண்டு பண்பாடு!'' என்ற நயக்கத்தக்க வரிகளின் மூலம்: நாகரித்தோடு சொல்லி வைக்கிறான். பாடும் முறையிலும், பழகு தமிழிலும், பாடப்படும் பொருளிலும் தனது தமிழாற்றலையும், கவிதா சக்தியையும் காட்டி வென்றவன் எங்கள் கருத்திலே நின்றவன் கவியரசு கண்ணதாசன்!

தோளை நிமிர்த்து! - அதில்
நீதிவரவில்லை யெனில்
வாளை நிமிர்த்து!''

என்று, சீற்றநுரை கக்கும் சிவப்புப் பாடல்கள் எல்லாம், இனத்தோடு பாய்ந்து வந்தன. வார்த்தைகளைக் கோர்த்துக், கோர்த்து அவன் வார்த்தெடுத்த கவிதை சிற்பங்களை வனப்பு மிகுந்தவை. திரைப்படப்பாடல்கள் இப்படியென்றால் அவன் தனிப்பட எழுதிய பாடல்களும் அப்படியே தான்!

நெஞ்சை நிமிர்ந்துங்கள் தோழர்களே - இனி
நேருக்கு நேர் நின்று பார்ப்போம் - சம
நீதிகுய போர்ப்படை சேர்ப்போம் - இங்கு
பஞ்சைபராரிகள் துஞ்சி இரந்துண்ணும
பட்டினிக் கோலத்தை மாய்ப்போம் - நெஞ்சின்
பாரத்தை வேரோடு சாய்ப்போம்!''

''இப்படியே பசி நீளுமென்றால் இது
என்ன சுதந்திர பூமி? - ஏன்
இத்தனை ஆயிரம் சாமி? - இங்கு
வந்த சுதந்திரம் ஏழைகளுக்கு இது
வாழும் முதலைகள் தூங்க - பசி
வாட்டும் வயிறுகள் ஏங்க!'

எனவுரைக்கின்ற எரிமலைக் கவிதைகள் பலவும் ஏற்ற நடை போட்டன சொல்லப்போனால் அவனது நாஸ்திகப் போக்குத்தான், சமுதாய முன்னேற்றத்திற்குச் சாணை பிடிக்கும் கவிதைகளைச் சம்பவித்தது எனலாம்.

---

### வரலாற்றுப் பேராசிரியரின் திரிபுவாதம்

திரித்துவதாசன் க. முத்துசாமி அவர்களால் எழுதப்பட்டு அண்மையில் வெளியிடப்பட்ட ''எங்கள் ஊர் ஏழாலையூர்'' என்ற நூலில் தனது அணிந்துரை வரைந்த கலாநிதி சிற்றம்பலம் அவர்கள் யாழ்ப்பாணக்கல்லூரியைப் பற்றியும் தென்னிந்திய திருச்சபை யாழ்ப்பாணமறை மாவட்டத்தைப் பற்றியும குறிப்பிடப்பட்டிருக்கும் உண்மை வரலாற்றை வேண்டுமென்றே திரித்துக்கூறும் உரைகள் எங்கள் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன. ஒரு பல்கலைக்கழக வரலாற்றுத் துறை பேராசிரியர் வரலாற்றிற்கே மாறான சில கருத்துக்களை வெளியிட்டது கவலைக்குரிய.

1974இல் வடபகுதிக்கு பல்கலைக்கழகம் அளிக்க விரும்பிய அரசாங்கம் பரமேஸ்வராக் கல்லூரி, யாழ்ப்பாணக்கல்லூரி ஆகிய இரு கல்லூரிகளை தேர்ந்தெடுத்தது உண்மை. இவற்றில் பரமேஸ்வராக் கல்லூரி ஏற்கனவே 1960ம் ஆண்டு அரசாங்கத்தினால் சுவீகரிக்கப்பட்டு அரசாங்கத்தினாலேயே நடத்தப்பட்ட ஒரு நிறுவனம். யாழ்ப்பாணக்கல்லூரியோ இந்நாட்டில் சகல மதத்தவர்களுக்கும் கொடுக்கப்பட்ட உரிமையைப் பாவித்து கிறிஸ்தவ திருச்சபையினால் நடத்தப்பட்டு வந்த ஒரு தனியார் கல்லூரி. அரசாங்கம் கொடுக்கப்பட்ட உரிமைக்குமாறாக யாழ்ப்பாணக் கல்லூரியை சுவீகரிக்க நடவடிக்கை எடுக்கத் தீர்மானித்த பொழுது அந்நாள் கல்லூரித் தலைவரான கலாநிதி ஹூதர் ஜெயசிங்கம் தாமே இதற்கு எதிராகக் குரல் எழுப்பி பல மதத் தலைவர்கள் சமூகத் தலைவர்களின் கையொப்பங்களை பெற்று அரசாங்கத்திற்கு ஒரு மனு அனுப்பினார் அது மாத்திரமன்றி திருச்சபை பிரதிநிதிகள், கல்லூரி ஆளுனர்சபைப், பிரதிநிதிகள் கொண்ட பிரதிநிதிக்குழுவில் சேர்ந்து அந்நாள் கல்வி அமைச்சரை சந்தித்து சுவீகரிப்பதைத் தடை செய்ய முயற்சி எடுத்தார். எனவே அவர் கல்லூரியைக் கையளித்தார்'

என்று கூறுவது உண்மைக்கு அப்பாற்பட்ட ஒரு கூற்றாகும். அரசாங்கம் சுவீகரிக்கும் அதிகாரத்தைப் பாவித்து பொலிஸ் உத்தியோகத்தரை அனுப்பியே கல்லூரியை எடுத்தது. ஒருவரும் அதைக் கையளிக்கவில்லை

கல்லூரி சுவீகரிக்கப்பட்ட பொழுது 150 ஆண்டுகளுக்கு மேலாக

3ம் பக்கம் பார்க்க

தாரகை ஒளி

— உயிர்களிடத்தில் அன்பு வேணும்—தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்
வயிரமுடைய நெஞ்சு வேணும்—இது
வாழும் முறைமையடி பாப்பா

பாரதியார்

உதயதாரகை
ஆதீன காரியாலயம், வட்டுக்கோட்டை
Estd. 1841
மலர்: 156 08-09-1995 இதழ்: 34

# பயப்படாதே சிறுமந்தையே

இரண்டாவது உலக மகா யுத்தத்தின் போது ரஷ்ய அதிபர் ஜோஸப் ஸ்டாலின்,

"பாப்பரசரிடம் (Pope) எத்தனை டிவிஷன்கள் இருக்கின்றன"

என்று கூறினார். அதற்கு பதிலுரையாகப் பாப்பரசர் பயஸ் எனது டிவிஷன்கள், ஸ்டாலினை பரமண்டலத்திலேயே சந்திக்கும் என்று கூறினாராம். டிவிஷன் என்பது இருபதினாயிரம் பேரைக் கொண்ட அணி. இன்று நமது நாட்டைப்பார்க்கின்ற பொழுது பாப்பரசரின் பதிலுரைதான் ஞாபகத்திற்கு வருகிறது. அரசபடைகள் நாளுக்கு நாள் தமது பலத்தை பெருக்கி வருகின்றன. ஒரு வேளை இராணுவ தளபதி திருச்சபையாரிடம் எத்தனை டிவிஷன்கள் இருக்கின்றன, என்று கேட்கலாம்.

பொன்னும் வெள்ளியும் என்னிடத்தில் இல்லை. நசரேயனாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்திலே எழுந்து நட. என்பதனையே நாம் விடையாக அவர்களுக்குக் கூறலாம்.

திருச்சபை கடந்த இரண்டாயிரம் ஆண்டுகளாக எத்தனை பேரரசுகளை கண்டு விட்டது. இயேசு பிரான் ஊழியஞ்செய்த காலத்தை லூக்கா பின்வருமாறு அறிமுகஞ்செய்கின்றார்.

> திபேரியுராயன் ராஜ்யபாரம் பண்ணின பதினைந்தாம் வருஷத்திலே, பொந்தியுபிலாத்து யூதேயாவுக்கு தேசாதிபதியாயும் ஏரோது காற்பங்கு தேசமாகிய கலிலேயாவுக்கு அதிபதியாகவும் அவன் சகோதரனாகிய பிலிப்பு காற்பங்கு தேசமாகிய இத்துரேயாவுக்கும் திராகொன்னித்தி நாட்டிற்கும் அதிபதியாயும் லிசானியா காற்பங்கு தேசமாகிய அபிலேனுக்கு அதிபதியாயும்"

என்று கொடுங்கோலரின் பெயர்களைப் பட்டியல் போட்டுக் காட்டுகின்றார்

ரோமப் பேரரசு, ரஷ்யப்பேரரசு, சீனப்பேரரசு, யப்பானியப் பேரரசு, பிரிட்டிஷ்பேரரசு என பல பேரரசுகள் தோன்றி மறைந்து விட்டன. ஆனால் பெத்தலகேமிலே மாட்டுத்தொழுவத்தில் ஒரு சிறு குழந்தையின் அழுகைக்குரலுடன் ஆரம்பித்த கிறிஸ்தவ இயக்கம் தொடர்ந்து வளர்ந்து கொண்டுதான் இருக்கின்றது.

சில மதங்கள் அரச ஆதரவு பெறுகின்ற பொழுதுதான் வளர்ச்சியடைகின்றன- இல்லாவிட்டால் வாடிவதங்கி விடுகின்றன கிறிஸ்தவம் அரச ஆதரவு பெற்றகாலத்தில் சிறப்பாக வளர்ந்தோங்கியது. அரச ஆதரவு இல்லாத காலத்திலும் சிறப்புற்று வளர்ச்சியடைந்தது.

இன்று இலங்கையின் அரசியலை நோக்கினால் திருச்சபையானது செல்வாக்கு அற்ற ஒரு நிலையில் இருப்பது கண்கூடு. கிறிஸ்தவ திருச்சபையை சந்தேகக் கண்ணோடு பார்க்கும் நிலைமை தோன்றிவிட்டது. இதனைக்குறித்து நாம் அச்சமடையத்தேவையில்லை, யேசுபிரான் 'என்னிமித்தம் உங்களை நிந்தித்துத் துன்பப்படுத்தி, பலவித தீமையான மொழிகளையும் உங்கள் பேரில் பொய்யாய் சொல்வார்களானால் பாக்கியவான்களாக இருப்பீர்கள்' என்று கூறினார்

யூலை மாதத்தில் நடைபெற்ற முன்னேறிப் பாய்தல் நடவடிக்கையும் தற்போது நடந்துவரும் எறிகணைத் தாக்குதலும் பலருக்கு வேதனையை ஏற்படுத்தியுள்ளன. கடவுளுடைய திட்டங்களை யார் அறிவார்? யோபு தன்னுடைய துன்பத்தின் போது "நான் தங்கமாய் வெளிவருவேன்" என்று குறிப்பிட்டான் ஆகவே இந்த அநுபவங்கள் எல்லாம் வீண் என நாம் கருதிவிடமுடியாது. உலகிலே நிறைந்திருக்கும் பல்வேறு துன்பங்களில் நாமும் பங்கெடுத்துக்கொள்கின்றோம். என்ற மனோ நிலை ஏற்படவேண்டும்-

வருத்தப்பட்டு பாரம் சுமப்பவர்களே நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள் நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன் என்று ரோமருடைய ஆட்சியால் அவதிப்பட்ட யூத மக்களுக்கு யேசுபிரான் உபதேசித்துச் சொன்னார் ஆறுதல் அளிக்கும் தேவனாகவே இறைவனைக் கண்டார்கள் இன்று நம்முடைய நாட்டிலே பக்தர்கள் அக்கினியின் ஊடாக நடந்து செல்கின்றார்கள். பயங்கர புயற்காற்றை எதிர்கொள்ள வேண்டியவர்களாக உள்ளார்கள். எப்பொழுது பார்த்தாலும் கல்மழை பொழிந்து கொண்டிருக்கிறது. இதற்கூடாக நாம் நடந்து கொண்டிருக்கும் போது இறைவனின் ஒத்தாசை எமக்கு அவசியம். படைபலத்தையும் அரசாங்க அடக்கு முறையையும் கண்டு நாம் சோர்ந்து போகக்கூடாது. ஏனெனில் விசுவாசம் என்பது நம்பப்படுவைகளின் உறுதியும் காணப்படாதவைகளின் நிச்சயமுமாக இருக்கிறது.

வரலாற்றுப் .....

கல்லூரி நூல் நிலையத்தில் சேர்க்கப்பட்ட நூல்களை யாழ் பல்கலைக்கழக அதிகாரிகள் திருநெல்வேலி வளாகத்திற்கு எடுத்துச் சென்றது சுவீகரிப்புச் சட்டத்திற்கு முரணானது என்று கல்வி அமைச்சரே ஏற்றுக்கொண்டு அவற்றைத் திருப்பிக் கொடுக்கும்படி கேட்டுக் கொண்டார். இவை கலாநிதி சிறம்பலம் அவர்களுக்கு துரதஷ்டவசமாகவும் ஒரு கறைபடிந்த அத்தியாயமாகவும் தோன்றக்கூடும் ஆனால் இக்கல்லூரியை அரசாங்கம் சுவீகரிப்பதை எதிர்த்து நடத்தப்பட்ட பகிரங்க கூட்டத்தில் உரையாற்றிய முதலியார் சின்னத்தம்பி அவர்கள், ஒரு சுவைக் கொவிலாகத் திகழ்ந்த யாழ்ப்பாணக் கல்லூரியைக் காப்பாற்றுவது தமிழ் மக்களின் கடமையென்று வலயுறுத்திக் கூறினார்.

திருச்சபை இக்கல்லூரியை இன்று நூற்று எழுபத்திரண்டு ஆண்டுகளாக ஓர் இறைபணியாகவும் மக்களுக்கான கல்விப்பணியாகவுமே நடத்தி வருகின்றது. எனவே இழிவு படுத்துவோரின் கூற்றுக்களை அக்கறை பண்ணாமல் வரலாற்று நயாகரின் தீர்ப்பையே எதிர் நோக்கி இப்பணியை தொடர்கின்றது.

யாழ்ப்பாணக்கல்லூரித்திருச்சபை

## பிரார்த்தனை மண்டபம்

கட்டைவேலி மெதடிஸ்த திருச்சபை பருத்தித்துறை, அரசினர் ஆதர வைத்திய சாலை நிர்வாகத்தின் அனுசரணையுடன் கிறிஸ்தவ பிரார்த்தனை மண்டபமொன்றை வைத்தியசாலை வளவில் அமைக்க நடவடிக்கை மேற் கொண்டுள்ளது

## திருவும் அருள்திருவும்



அருள் திரு: என்ன? உமது மாமியார் இப்பொழுது வேதாகமத்தை இரவும் பகலும் படித்து குறிப்பெடுத்து மனனம் செய்கிறாவாமே?

திரு: கடைசிப் பரீட்சை நெருங்கி விட்டது என்று நினைத்து விட்டா போலும்.

மணிமாறன்

## ஐக்கிய ஆராதனை

யாழ்ப்பாணம் கிறிஸ்தவ ஒன்றியத்தினால் மாதா மாதம் நடாத்தப்பட்டுவரும் ஐக்கிய திருவிருந்து ஆராதனை செப்டெம்பர் மாதம் 24ம் திகதி ஞாயிற்றுக் கிழமை மாலை 4.30 மணியளவில் நல்லூர் பரி யாக்கோபு ஆலயத்தில் நடைபெற விருக்கிறது. இதற்கான ஏற்பாடுகளை ஒன்றியத்தின் செயலாளர் அருள்திரு மில்ரன் அடிகளார் செய்துள்ளார்

தென்னிந்திய திருச்சபை
யாழ்ப்பாண அத்யட்சாதீனம்

# ஆதீன விழா 1995

30. 09. 1995 சனிக்கிழமை
வட்டுக்கோட்டைப் பேராலயத்தில் நடைபெறும்

8.30 மணி நற்கருணை வழிபாடும்
குருத்துவ அபிஷேகமும்
[சங்கீதமுறை]

நடத்துபவர் : மகா கனம் கலாநிதி எஸ். ஜெபநேசன்
பிரசங்கம் : மகா கனம் டி. ஜே. அம்பலவாணர்

## குருத்துவ அபிஷேகம்

வண. து. வசந்தகுமார
[உடுப்பிட்டித் திருச்சபை ஊழியன்]

வண. து. ஜெயச்சந்திரன்
[மாங்குளம், மகிழ்ச்சிபுரம் திருச்சபை ஊழியன்]

வண, அன்ரனி சவரிமுத்து
[பாரதிபுரம் திருச்சபை ஊழியன்]

10.30 மணி 1994ம் ஆண்டு ஆதீன அறிக்கைப் புத்தக வெளியீடும், கலைநிகழ்ச்சிகளும்

01.00 மணி ஐக்கிய போசனம்

யாவரும் அன்புடன் அழைக்கப்படுகிறீர்கள்

C,T.றொபேர்ட்ஸ்
செயலாளர்

தென்னிந்திய திருச்சபை
யாழ்ப்பாண அத்தியட்சாதீனம்

The Morning Star

Diocesan Office, Vaddukoddai 08.09.1995

## EDITORIAL

### JOHN SCUDDER

John Scudder, the first Medical Missionary to Jaffna and India was remembered on September 3rd. John Scudder, who believed in the healing ministry, felt that he was called by Christ as a Medical Missionary to India and Srilanka when, he read a tract calling for medical missionaries. There were some 600 thousand people, all over the world, suffering because of lack of medical missionaries, according to the tract Dr. John was the second son of a very successful Lawer in New York. Dr. John himself excelled in his own field even at a young age of 25 years. His father was very proud of his son and dreamt that one day his son would become even more prominent than himself. Therefore, his father was shocked and dismayed when he heard that Dr. John Scudder had decided to go away to a Southeastern Country as a medical missionary. He told his son that, he was mentally deranged, that is why he decided to go as a missionary. When Dr. John told his father for the third time that he had decided to go to Ceylon & India as a medical missionary, his father's anger saw no bounds and he shouted that he would sever all ties on the day he leaves the shores of America.

The whole of New York assembled in front of Dr John Scudder's house aud pleaded with him not to leave them They told they needed his services very much and that they would do all what theycould, to make his life more comfortable he had already decided to foresake all comforts in order to serve But among the poor, the downtrodden and the sick. The life would be very hard among those who live in darkness where, caste stigma and inhuman practices like 'Satty'- throwing alive the widow into her deceased husband's pyre- and idol worship prevailed. There were also tribal feuds.

He felt that he could not be called a good Christian just because he attended Church services regularly. His Master though was equal with God, came into the world as a servant and worked among the sick, down trodden, the afflicted and the poor. If he were to follow Jesus he should give up all comforts, take up his cross and follow his Master daily.

Dr John & Mrs Harriet Scudder arrived in Jaffna in 1819 and started their medical mission at Pandatheruppu. Then they served at Chavakachcheri and went over to Madras in Tamilnadu, where they served among Muslims and Adivasies. He used to go through jungles infested with robbers, murderers and wild beasts in order to heal the sick who lacked medical facilities.

Dr. John Scudder's children, grandchildren were( till now ) involved in medical mission. His grand daughter Dr. Ida Scudder started a hospital for the women at Vellore. Today there stands the Christian Medical College in its place. Many Diocesan sponsored candidates passed out as medical graduates It is disheartening to note that the graduates of C. M. C Vellore claim that the situation in Jaffna is not conducive for them to practise here. Even the Medical graduates of Jaffna University are reluctant to work in Jaffna. People should realize that the living conditions in Jaffna was far worse when Dr Scudder served the people of Jaffna as a medical missionary.

It is a situation like this when, people die of diarrhea because of lack of medicines and no physician to heal, the people of Jaffna need physicians most dear. When normalcy returns many will come back to practice. But then we will have too many. Now is the time we need physicians. Therefore, please pray that God will change the hearts of many physicians so that they will follow the footsteps of Dr. John Scudder and serve the people who are forsaken by many.

## Statement on Rupavahini News Bulletion on 23 08 1995 by the JD, CSI Church Colombo.

It is with great consternation that we bring to the notice of the people of Srilanka the misinformation broadcast on all news bulletins of Rupavahini on 23rd Aug. 95. This has led to the image of the Church being tarnished In order to clear the defamatory image which has been projected on our Diocese, Our Bishop and the Church in general, we release this statement.

A Pastoral team from the U. S. A. 'Sommer Haven Ranch International' visited the Northern Province in the latter part of February 95. During this period since there was no embargo on food, medicines and agricultural implements, they felt that equipping the Hospitals to enhance the Medical falilities would help to allieviate the sufferings of the poor people. After returning to the U. S. A. they shipped a container of medical supplies, clothing, food items and Christian literature on the 13th of April 1995 on vessel Ever Gallant which arrived here on 27th May 1995. The medical supplies were donated for use in the Mission Hospitals of Manipay, Inuvil and Paranthan. This assesment was done and the Container was loaded during the time of truce. By the time the container arrived in Colombo, hostilities had resumed and the embargo reimposed. The consignment was not cleared for the following reasons.

a) The requirement to register the J. D. C. S. I. Church as an N. G. O. with the Social Services.

b) To obtain an import licence for the Medical supplies which entailed the payment of a fee of over Rupees one hundred and fifty thousand.

c) Virtual impossibility of transportation of these items to the North due to the reimposition of the embargo.

All these goods were itemised and the packing list was available to the authorities

It would appear that the Government electronic media has deliberately distorted facts in announcing on the 6. 30 p. m. Tamil telecast that the Bishop Rt. Rev. Dr. S. Jebanesan had run away and was in hiding in the Navaly Church. The Bishop Rt. Rev. Dr. S. Jebanesan is the Bishop in Jaffna and is always resident in the Bishop's House in Vaddukoddai. The Bishop on his last visit to Colombo met Her Excellency the President prior to returning to Jaffna. The Sinhala and English telecasts gave another distorted version totally different from the Tamil telecast implicating Rev. S. Jeyanesan.

Such fabricated information telecast over state television creates disharmony and suspicion among the people of Sri Lanka Wilful discrediting of the head of a religious organisation is to be condemned.

The Government print media too resorted to the release of false information giving front page coverage to the issue. We condemn this deliberate distortion of facts and demand that the correct information be given prominance through the media.

The mission of the Church is to work amidst the suffering humanity according to the teachings of our Lord Jesus Christ.

### Induction of New......

(Continued from page 1)

In his sermon, he compared the Tower of Babel and the Pentecost and said even Church denominations try to build Towers of Babal. We much demolish our Towers at the feet of the Lord and then go into the world and serve the people who are afflicted. There we will encounter our Lord with his wounds. If we don't bear wounds as a result of our toil, we are not worth entering the portals of heaven. Service ended with benediction by the President Refreshments were served to all.

### Anthology ..

(Continued from page 1)

shops with religious sections to order the book direct from Harper Collins Religious.

A leaflet with details of the book will be available later from CWM. Copies of **Dare to Dream** will also be available from CWM at the above price (excluding postage).

### Jaffna Christian Union conduct Common Worship

The monthly common worship of the Jaffna Christian Union was conducted at the City Mission Church on Sunday the 19th of August at 4. 30 p. m. The Rev. Earl P. Solomons conducted the service assisted by the Rev. Milton Solomon. The Rev. Dilrukshan Joseph of the Anglican Church preached the sermon.

Registered as a News Paper at the G P. O. Sri Lanka. News Printed for the Jaffna Diocese of the Church of South India at the American Ceylon Mission Press, 182, 1st Cross Street, Jaffna on Friday the 08th of Septembe 1995 published by Mr. G. Nadaraja, Diocesan office, Vaddukoddai.